RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22444

OPEN ACCESS

# காமற் கடந்த வாய்மையள் மணிமேகலை

**சு. இராஜேந்திரன்** [அ, *]

[அ] அகராதியியல் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா

# Manimekalai, an Honest person who has conquered Desire

**S. Rajendran** [a, *]

[a] Department of Lexicography, Tamil University, Thanjavur-613010, Tamil Nadu, India

* Corresponding Author: athiitha@gmail.com

Received: 27-06-2022
Revised: 24-09-2022
Accepted: 03-10-2022
Published: 19-10-2022

Check for updates

**ABSTRACT**

As evidenced by the multiplicity of the Tamil race, with its rich language and primitive landscape, it has many human personalities within itself. In particular, in order to organize the changing social disciplines, it not only holds on to the poets of the epic period to face external pressures and various doctrinal upheavals but also approaches them, scrutinizes them, provides new messages, and preserves the form of thought from changing. In a society that has become monocultural, a woman burns her modesty to overcome hunger. Manimekalai, the descendent of Kovalan, who had Kannagi and the ascetic Madhavi as her mothers and who considered art to be the equivalent of life, shook this monoculture on that very day itself. She was shaken by unceasing grace. This hardened and stoned society shed a lot, but it was a single culture that blossomed, ripened, became a seed, and spread. It is not only because of Manimekalai's sufferings but also because of society's unavoidable great compassion that Manimekalai is still regarded as inevitable even today. On this basis, this study is a descriptive one as it compares women's sufferings, feminist ideas, and Tamil traditions with Manimekalai, an incomparable story. Manimekalai did not stop offering motherhood to all with her eternal mercy also, with her Amudha Surabhi (a vessel that gives inexhaustible food), she removed the hunger pangs of thousands of people. People like Manimekalai do not stop with these gestures. On the contrary, the purpose of this study is to explain why she continues to be established as an exemplary woman in the land of Tamil.

**Keywords:** Manimekalai, Society, Tamil Traditions, Madhavi

## முன்னுரை

மனிதச் செயல்பாடுகள், பண்புகள் போன்றவற்றிற்குச் சான்று பகர இன்னொரு மனிதனின் செயல்பாடுகள் தேவைப்படுகின்றன. ஆதி நிலப்பரப்பை, வளமான மொழியை இணையாகக் கொண்டு பல்கிப் பெருகிய தமிழ்ப் பேரினம் சான்றுகளுக்கென்றே பல மனித ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. உலகின் பல்வேறு இனங்கள் மதங்களின் புனித நூல்கள் வழியே தம்மாந்தர்களைச் சான்று பகரும் போது, தமிழினம் இலக்கிய மாந்தர்களை இன்றுவரை எடுத்தியம்பி வருகிறது. குறிப்பாக, மாறிவரும் சமூக ஒழுக்கங்களை ஒழுங்கமைக்கப் புறச்சூழல் அழுத்தங்களைப் பல்வேறு தத்துவார்த்த எழுச்சிகளை எதிர்கொள்ள காப்பியக் கால மாந்தர்களை இறுகப் பிடித்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அவர்களை அணுகி நுணுகி ஆய்ந்து புதியப்புதியச் செய்திகளை அளித்து சிந்தனை வடிவம் மாறாமல் பாதுகாத்து வருகிறது.

மானுடப் பெரு வரலாறு முழுவதும் உழைப்பு மறைக்கப்பட்டு அவள்கள் கண்டுபிடித்த வளங்களைப் பிடுங்கி அடிமையாக்கப்பட்டு அவன்களது வரலாற்றை அவள்கள் ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்டார்கள், மேலும் கடமை என்கிற எக்காலத்திலும் சகிக்கமுடியா சட்டகத்திற்குள்ளும் அடைக்கப்பட்டார்கள் வணங்கவும் கற்றுக் கொண்டார்கள். அடிமை என்கிற மனிதச் சிந்தனை பெண்களை இரண்டாம்பால் மாந்தர்களாகவும் ஆண்களின் ஏற்றுக்கொள்ளவே முடியாத வெற்றியிலிருந்தும் தொடங்கியது. ஆணினால் உருவாக்கப்பட்ட கடவுள், மதம் கலைக் கோட்பாடுகள், சித்தாந்தங்கள் என எல்லாமும் அடுக்குப் படைகளாக அடிமைத்தனத்தைக் காத்து வருகின்றன.

எப்போதுமே நதிகள் அமைதியாகக் கடல் போய்ச் சேருவதில்லை. கடலும் தன் எல்லையோடு மட்டும் நின்று விடுவதில்லை. ஒருநாள் தடம் மாறுவதன் மூலம் நிலத்தை மாற்றி இயற்கைச் சூழல்களை மாற்றி, அதுகாறும் வாழ்ந்த வாழ்விலிருந்து வேறொரு வாழ்விற்கு மனித இனத்தைத் தயார் செய்து விடும் வல்லமை கொண்டவை இவைகள். அதனால்தான் பெண்ணின் பெரும் எழுச்சியைக் கடற்கோளோடு இணைத்துத்துவிட்டார் இளங்கோவடிகள் (Manikavasagam, 2007).

"பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு

புத்தேளிர் வாழும் உலகு"

கணவனை வணங்கி அவர் அன்பைப் பெரும் மனைவியானவள் தேவர் உலகில் பெரும் சிறப்பைப் பெறுவாள் என்கிற திருக்குறள் மேற்சொன்ன அனைத்துக்கும் சான்றாகும் (Thiruvalluvar, 2018).

## இயற்கையின் படைப்பு மணிமேலை

"இயற்கையில் ஏற்படும் எண்ணற்ற மாற்றங்கள் அனைத்திலும் இயக்கத்தின் இயங்கியல் விதிகள் செயல்படுகின்றன. வரலாற்றில் தற்செயலாக நடப்பது போல் தோற்றமளிக்கும் நிகழ்ச்சிகளில் ஆளுகை செய்வதும் இதே இயங்கியல் விதிகள்தான். மனிதச் சிந்தனை வளர்ச்சியின் வரலாறு முழுவதிலும் ஊடுருவிச் செல்வதும் படிப்படியாக மனிதனின் மனதில் உணர்வைத் தோற்றுவிப்பது இதே இயங்கியல் விதிகள்தான்" (Thomson, 2017).

இயற்கையின் இயங்கியல் மனிதச் சிந்தனையைத் தீர்மானிக்கிறது. ஊடாக, சிந்தனையின் வளர்ச்சியிலும் சமூகச் சூழல்கள் பாரிய இடம் வகிக்கின்றன. இயங்குகின்ற சமூகத்தில் உயிர்ப்புடன் இருக்கும் மொழி அச்சமூகத்தை நேர்மறையாக அல்லது எதிர்த்து அல்லது கற்பனாவாதங்களோடு இணைத்து அதிபுனைவான இலக்கியங்களை உருவாக்கும். எனினும் இலக்கியங்களின் ஊடுபாகு சமூகத்தின் இயங்கியல் நடைமுறையாகும் (Rajadurai, 2014).

ஒரு தூண்டுகோலுக்கான (STIMULUS) எதிர்வினைதான் தன்னிச்சை (REFLEX) செயல்பாடு என்று வரையறுத்து அதைப்போல தன்னிச்சை செயல்களால் இலக்கியங்களின் வழி சமூகச் செயற்பாடுகளில் அகம் மற்றும் புறம் தூண்டிய தமிழ் மாந்தர்களின் மிக நீண்ட கருணையின் தலைமாந்தர்களில் மணிமேகலையும் ஒருவர். பாடுகள் நிறைந்த அவலச்சமூகம் மிக முன்னேறிய எல்லா வாய்ப்புகளையும் கொண்டுள்ள சமூகம். ஒருபுறம் நிலவிய பொதுவான நம்பிக்கைகள் என எல்லாவற்றிலும் பொதுவான பசியைப் போக்க பாத்திரம் நெய்த மணிமேகலை புத்தனின் ஓசையாகக் காலத்தை நிறைக்கிறார்.

## கலாச்சாரத்தில் கலகம் செய்த மணிமேகலை

ஒற்றைக் கலை கலாச்சாரமாக மாறிவிட்ட சமூகத்தில் ஒரு பெண் பசிப்பிணி போக்கத் தன்னை தம் சீரிளமையை எரித்தாள். தெய்வமான கண்ணகி துறவு பூண்ட மாதவி என இருமகளிரைத் தாயாக கொண்டவரும், கலையை உயிருக்கு இணையாகக் கருதிய கோவலன் வழிவந்த மணிமேகலை அன்றைக்கே இந்த ஒற்றைக் கலாச்சாரத்தை அசைத்தாள். ஓயாத கருணையால் உலுக்கினாள். இறுகிக் கல்தட்டிப் போன இச்சமூகம் உதிர்த்தது நிறைய, ஆனால் பூத்துக் காய்த்து கனிந்து விதையாகி நின்று பரவியது ஒற்றை கலாச்சாரமே ஆகும். மணிமேகலைய இன்றைக்கும் தவிர்க்க முடியாமல்

நினைக்கின்றார்கள் என்பது மணிமேகலையின் பாடுகள் மட்டுமல்ல சமூகத்தின் தவிர்க்க இயலாத பெரும் கருணையுந்தான்.

மணிமேகலை காப்பியத்தில் சித்திராபதி, மாதவி, மணிமேகலை, வசந்தமாலை, சுதமதி, கண்ணகி, காயசண்டிகை, ஆதிரை, இலக்குமி, சாலினி, மருதி, விசாகை, பீலிவளை, வசந்தவை, உப்பீரி, தாரைவிரை, இராசமாதேவி, ஆகிய மாந்தர்களும் மணிமேகலை, சித்ராதேவி, சம்பாதேவி, தீவதிலகை என்கிற பெண் தெய்வங்களும் கதை நகர்த்திகள் கதை நகர்த்திகளின் எல்லோருக்குமான பின்புலம் அவலம் அல்லது விழிப்புநிலை எழுச்சி என்பதாக இருக்கின்றது என்பதை உணர்ந்தால் மணிமேகலை காலச் சமூகத்திலேயே பெண்ணினம் கலாச்சார ரீதியாகப் பெரும் போரை ஆண்வயத்திற்கு எதிராகத் தொடங்கிவிட்டதை அறியலாம்.

"விலங்குகள் தாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான அளவிற்கே செயல்களில் ஈடுபடுகின்றன. பறவைகள் கூடுகட்டுகின்றன. எறும்புகள் புற்று அமைக்கின்றன. மனிதன் செயல்படுகிறான். ஆனால் அவன் உணர்வுள்ள ஜீவன். அவன் தனது வாழ்க்கை செயலையே தன் சித்தத்திற்கும் உணர்வுக்கும் உட்படும் இலக்குப் பொருளாக ஆக்குகின்றான். புற உலகின் பல்வேறு பண்புகளை அதாவது உண்மைகளைக் கண்டறியும் அதே நேரத்தில் வெறும் உயிர் வாழ்வதற்கு வேண்டிய செயல்களுக்கான இரண்டுக்கும் அப்பால் வேறு வேறு சில திறன்களும் அடங்கியுள்ளன என்பதைக் காண்கின்றான். எனவே தான் உயிர் வாழ்வதற்கான தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காகச் செயல்களோடு மட்டும் அவன் நின்று விடுவதில்லை.

அந்தத் தேவையில்லாத பொழுதும் ஏன் அந்தத் தேவை என்று விடுதலை பெற்ற பின்னரே அவன் உண்மையான படைப்புத் தொழிலில் ஈடுபடுகின்ற விலங்கு தன்னைத்தானே மறுபடைப்பு செய்கிறது. மனிதன் இயற்கை முழுவதையும் மறுபடைப்புச் செய்கின்றான். விலங்கின் படைப்பு உடனடியாகவே அதன் உடலுக்கு உரித்தாகிவிடுகிறது. மனிதனோ சுதந்திரமாகத் தனது படைப்பை எதிர்கொள்கிறான். விலங்கு தனது உயிரினத்தின் தேவையையும் பண்பையும் பொருத்தே பொருட்களை ஆக்குகிறது. மனிதனோ எல்லா உயிரினங்களின் பண்புக்கும் ஏற்றபடி எப்படிப் படைப்பது என்பதை அறிவான். எனவே அழகின் விதிகளுக்கேற்ப படைக்கிறான் என்கிறார். மனித இனம் மற்றைய உயிர்களோடு வேறுபடுவதில் முக்கியமானது தன்னை உணர்தல். அதன்வழி சமூகத்தை இயற்கையை அறிதல் என்பதுதான். அதனால்தான் மனிதனின் படைப்புகள் அழகைத் தாங்கி நிற்கின்றன. இத்தகைய படைப்புகளில் அழகின் அழகானது பெண் வருணைகளே இவ்வர்ணணைகளையும் மீறி மாந்தராகக் கொண்டப்படுகிறார் மணிமேகலை.

## உள்ளமும், உருவமும்

“நல் இள அன்னம் நாணாது ஆங்கு உள்

வல்லுந கொல்லோ மடந்தை தன் நடை

மா மயில் ஆங்கு உள வந்து முன் நிற்பன

சாயல் கற்பன கொலோ தையல் தன்னுடன்

பைங்கிளி தாம் உள பாவை தன் கிளவிக்கு

எஞ்சல கொல்லே இசையுந அல்ல

என்று இவை சொல்லி யாவரும் இனைந்து உகச்

செந்தளிர்ச் சேவடி நிலம் வடு உறாமல்

குரவமும் மரவமும் குருத்தும் கொன்றையும்"

நல்ல இளமையான அன்னம், அவளது நடையைக் கண்டு, தாமும் அவ்வாறு நடக்க இயலாமைக்கு நாணாது, அங்கு உள்ள அவைகள் நடக்க வல்லனவோ மணிமேகலையின் நடையைக் கண்டு மாமயிலகள் உள்ளே வந்து முன்நின்று அவளது வடிவத்தை தாமும் கற்கின்றன (Swaminatha Iyer,

2015). மணிமேகலை தன்னுடன், பைங்கிளிகள் தாம் அங்குள்ள பாவையின் மொழிக்கு மிஞ்சுதல் கொண்டு, இசைக்க வல்லது அல்ல என்று இவைகளை யாவரும் இணைந்து சொற்களை உதிர்க்கச் சிவந்தன போன்ற சேவடிகள், நிலத்தில் விரிசல் இல்லாது தழும்பு குரவமும், வெண்கடம்பமும், குருத்தும், கொன்றையும் என நிலம், மரம், பூஞ்சோலைகளோடு சேர்த்து வருணிக்கின்ற சாத்தனார் அம்மாந்தரின் உருவச்சிறப்பையும் உள்ளச் சிறப்பை,

“ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்

மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை

மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

ஏழை மக்களின் அரும்பசி களைவோர் இடத்தில்தான் உலகின் உண்மையான அறநெறி வாழ்க்கை அமைந்துள்ளது (Swaminatha Iyer, 2015). அணுக்களால் ஆன இந்த உலகில் வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆவர் என்று மணிகேலை மேன் மாந்தராக உயர வேண்டியதின் அறத்தைக் கூறி,

"ஆருயிர் மருந்தாம் அமுத கரபியெனும்

பெரும் பாத்திரம் மடக்கொடி பெற்றனை

மக்கள் தேவர் எனவிரு சார்க்கும்

ஒத்த முடிவின் ஒரறம் உரைக்கேன்

பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்

தவப்பெரு நல்லறம் சாற்றினர் ஆதலின்

மடுத்ததீக் கொளிய மன்னுயிர்ப் பசி கெட

எடுத்தனள் பாத்திரம் இளங்கொடி தானென்" (Swaminatha Iyer, 2015)

“அரிய உயிர் மருந்தாம் அமுதசுரபி என்னும் மாபெரும் பாத்திரம் மடக்கொடி மணிமேகலையே நீ பெற்றுள்ளாய்! மக்கள் தேவர் என இரு சாராருக்கும் ஒத்த முடிவின் ஓர் அறம் உரைக்கின்றேன் பசிப்பிணி தீர்த்தல் ஒன்றே புத்தரும் அறிவுறுத்தினார் ஆதலின் மூட்டிய தீ திசையெல்லாம் ஒளி விடுவதைப் போல நிலைபெற்ற உயிர்களின் பசி நீங்க எடுத்த நல்பாத்திரம் இளங்கொடி மணிமேகலை தான்” என அறவணவடிகள் உரைப்பதன் மூலம் மணிகேலையின் செயல்பாடுகள் உயர்ந்திருந்ததை அறிய வைத்தும்,

“அறமெனப்படுவது யாது எனக் கேட்பின்

மறவாதிதுகேள் மன்னுயிர்க்கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டது இல்"

அறம் எனப்படுவது எது எனக் கேட்டால் நிலைபெற்ற உயிர்களுக்கு எல்லாம் உண்ண உணவும் உடுக்க உடையும் வாழ்வதற்கான உறைவிடமும் தான் வேறு எதுவும் கண்டதில்லை என மணிமேகலை கூறுவதன் மூலம் விளக்குகிறார் (Swaminatha Iyer, 2015).

## பேரன்பினள் மணிமேகலை

பழைய வடிவங்களில் புதிய மாற்றங்களை செய்வது தான் கலைஞனின் வேலையாக உள்ளது. உள்ளபடியே சிந்தித்ததால் காலம் அவனது படைப்பைச் செரித்து மறந்துவிடும். அதனை உணர்ந்த கலைஞன் இயல்பான சமூகத்திற்கும் தன்கதை மாந்தர்களுக்கும் தம் கதைமாந்தர்களின்

செயல்பாட்டிற்கும் இடையில் ஒரு முரண்பாட்டை உருவாக்குகிறான். அம்முரண்பாடு என்பது ஒப்பற்ற மாந்தர்கள் தோன்றிவிடுவதற்கான வரலாறாக மாறிவிடுகிறது என்பதை மணிமேகலை வரவாறு வழி அறியலாம். தனது ஓயாக் கருணையைப் பொங்கும் அனைவருக்குமான தாய்மையை மணிமேகலை அள்ள அள்ளச் சுரக்கும் அமுத சுரபியைக் கைக்கொண்டு ஆயிரமாயிரம் மக்களின் பசிப்பிணியைத் தீர்த்து வைத்தார்.

"ஈரம் மறுக்கப்பட்ட எல்லாக் கரைகளிலும் ஆயிரம் முலைகள்

அமுத சுரபிகளாய்

புனலின் தன்மையுடன் குருதியின் சூட்டுடன்

அந்த நதியிம்

அவ்வாறு நடந்தது"

என்று தீராப் பசி தீர்த்த மணிமேகலையை உச்சிமுகர்ந்த இன்குலாப். அக்காலத்தின் பசிக்குப் பாத்திரமேந்திய மணிமேகலையைத் தூய வரிகளாலும் ஏந்தியிருப்பார் (Swaminatha Iyer, 2015).

"சிறையும் உண்டோ செழும் புனல் மிக்குழீஇ

நிறையும் உண்டோ காமம் காழ்க் கொளின்" (Ilavazhuthi, 2017)

நீர் பெருக்கெடுத்து வருகையில் தடுக்கின்ற அரண் ஏதேனும் உண்டோ காமத்தை உறுதியாகக் கொண்டால் தடுத்து நிறுத்துகின்ற கற்பு தடுக்காது என்ற உதயகுமாரன், மேலும்,

'கற்புத் தான் இலள் நற்தவ உணர்வு இலள்

வருணக் காப்பு இலள் பொருள் விலையாட்டி என்று

இகழ்தனன்'

கற்பு இல்லாதவள் நல்ல தவஉணர்வும் இல்லாதவள். மரபு நிலையைக் காப்பவளும் இல்லாத பொருளுக்காகத் தன்னை விற்கும் விலை மாது என்றும் இகழ்ந்தான் (Swaminatha Iyer, 2015). அதற்கு மணிமேகலை

"ஆகி நயந்தோன் என்னாது புதுவோன் பின்றைப் போனது என் நெஞ்சம் இதுவோ அன்னாய் காமத்து இயற்கை இதுவே யாயின்கெடுக தன் திறம்"

உதயகுமாரன் மிகுதியாகப் பேசினான் என்று எண்ணாமல் அந்தப் புதியவன் ஆன உதயகுமாரன் பின்னே போகிறது என் நெஞ்சம் காமத்து இயல்பு எனில் காமத்தின் இயல்பே கெடுக எனச் சாபமிட்டாள் மணிமேகலை (Swaminatha Iyer, 2015). இப்படிக் கூறிய மணிமேகலையைத் தேடிவந்த உதயகுமாரனிடம் சுதமதி

"ஊழ்தரு தவத்தவள் சபா சரத்தி

காமற் கடந்த வாய்மையவள்"

"மணிமேகலை நீங்கள் சாதாரண பெண் இல்லை. மணிமேகலை பழைய வினையின் கற்பகமரம். தவத்தை மேற்கொண்டவள் சபையில் அம்பு போன்றவள். காமத்தைக் கடந்த வாய்மையள்" என்றாள். மணிமேகலை போன்ற கதைமாந்தர்கள் இந்த சமூகத்தை விமர்சனம் செய்து அந்தச் சமூகத்தை மாற்ற முயற்சி மேற்கொண்டார்கள். அதே அளவிற்குத் தன்னையும் விமர்சனம் செய்து கொண்டு தன்னையும் உயர்ந்தவராகத் தகவமைத்துக் கொண்டார்கள் (Swaminatha Iyer, 2015).

## முடிவுரை

மணிமேகலையும், அட்சய பாத்திரமும் இலக்கிய மனிதர்களா என்றால் இல்லை. அக்காலத்தில் அவர்கள் தேவைப்பட்டார்கள் என்பதை உணர்ந்தே படைப்போன் எழுதுவான். படைப்பவனின்

பேரறிவால் இந்தக் கதை மாந்தர்கள் நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் தேவைப்படுகின்றவர்களாகவே இருக்கிறார்கள்.

## References

Ilavazhuthi, V. (2017) Sathanar Aruliya Manimekalai, Moolamum Uraiyum, Kavitha Publications, Chennai, India.

Manikavasagam, V.S. (2007) Irattai Kappiyangal, Chellappa Pathippagam, Chennai, India.

Rajadurai, S.V. (2014) Manidha Saaram Ariviyal Kalai Aagiyavatrin Thotruvaigal, George Derwent Thomson, Chennai, India.

Swaminatha Iyer, (2015) Manimegalaiyel Samyamum meiyalum, U.V. Sa, Library, Chennai, India.

Thiruvalluvar, (2018) Thirukkural, Vanitha Pathippagam, Chennai, India.

Thomson, (2017) Manitha saaram, New Century Book house, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License